JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**MC. 7/2017**

**Petitioner present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of **03.07.2026.**

**R.W. 1 Name: Amburos S/o. ஜேக்கப்**

**மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** என்னுடைய சொந்த ஊர் சென்னிமலையில் உள்ள பூச்சக்காடு வலசு என்றால் சரிதான். மனுதாரர் பிரேமலதா எனக்கும் என்னுடைய முதல் மனைவிக்கும் பிறந்த முதல் குழந்தை என்றால் சரிதான். எனக்கும் என்னுடைய முதல் மனைவிக்கும் ராஜேஷ்குமார், ஜான் வினோத்குமார் என்ற இரண்டு மகன்கள் பிறந்தார்கள் என்றால் சரிதான். நான் ராணுவத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும் பொழுது எனக்கும், முதல் மனைவிக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். மனுதாரர் பிரேமலதா ஆறாம் வகுப்பு படிக்கும் பொழுது முதல் மனைவி இறந்துவிட்டார் என்றால் சரிதான். முதல் மனைவி இறக்கும்பொழுது இரண்டு மகன்களும் சிறிய வயது என்றால் சரிதான். முதல் மனைவி இறந்து எத்தனை ஆண்டுகள் கழித்து இரண்டாவது திருமணம் செய்தேன் என்றால் நான்கு ஆண்டுகள் கழித்து இரண்டாவது திருமணம் செய்தேன்.

2. பூச்சுக்காட்டுவலசில் எனக்கு சொந்தமான பூர்வீக வீடு இடிந்த நிலையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு சொந்தமான பூமி பூச்சுக்காட்டுவலசில் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் பங்காளிகளுக்கு அங்கு சொத்து உள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் சசிகுமாரை தெரியுமா என்றால் தெரியாது. அவர் என்னுடைய உறவினர் என்றும் அவருடைய சொத்து என்னுடைய சொத்தை ஒட்டி உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உடன்பிறந்த சகோதரர் தற்போது உயிரோடு இல்லை

உடன் பிறந்த இரண்டு சகோதரிகள் உள்ளார்கள். நான் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளும் பொழுது என்னுடைய மகன்களும், மகளும் எங்கிருந்தார்கள் என்றால் சிலேட்டர் நகரில் உள்ள என் முதல் மனைவியின் தாயார் வீட்டில் இருந்தார்கள்.

3. நான் இரண்டாவது திருமணம் செய்து கொண்ட பின்னிட்டு என்னுடைய மகன்களும் ,மகளும் என்னுடைய மாமியாரின் பராமரிப்பில் இருந்தார்கள் என்றால் சரிதான் நான் பணம் கொடுத்தேன். நான் ராணுவத்திலிருந்து கொண்டு என்னுடைய மகன்களுக்கும், மகளுக்கும் பணம் அனுப்பியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் மனைவிக்கு பிறந்தது சிறு குழந்தை என்று கூட பார்க்காமல் நான் இரண்டாவது திருமணம் செய்து கொண்டு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும், எனது மகன்களுக்கும் உதவிகள் செய்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் ஜான் வினோத்குமாருக்கு திருமணம் நடந்த விவரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் என் மகன் எனக்கு சொன்னார். ராஜேஷ்குமார் டெம்போ ஓட்டி பிழைத்து வரும் விவரம் எனக்கு யார் சொன்னது என்றால் என்னுடைய மகன் ராஜேஷ் குமார் சொன்னார். எங்கு வைத்து டெம்போ ஓட்டி வருகிறார் என்ற விவரத்தை என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை.

4. ராஜேஷ் குமாருக்கு இது நாள் வரை திருமணம் செய்து வைக்கவில்லை என்றால் சரிதான். நான் மனுதாரரை படிக்க வைத்ததாக வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் பத்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு அவர் பள்ளிக்கு செல்லவில்லை என்று சொல்லி உள்ள விவரம் பொய்யானது என்றால் சரியல்ல. என்னுடைய மகன் தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வருவதாக சொல்லி உள்ளேன் எந்த ஆண்டு முதல் எந்த மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தார் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த மனு தாக்கல் செய்வதற்கு முன்பு என்னுடைய மகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் சரிதான். மனுதாரர் எனக்கு அனுப்பியுள்ள அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகள் சரியானதா என்றால் இல்லை. மனுதாரர் தால்குடியைச் சேர்ந்த ஸ்டாலின் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்று சொல்லி உள்ளேன் அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. என்னுடைய பதில் அறிவிப்பிலும் அவ்வாறு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எங்கு வைத்து எந்த மத முறைப்படி திருமணம் நடந்தது என்று குறிப்பிட்டு பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் என் மகள் திருமணத்தை பற்றி சொல்லவில்லை. நான் என்னுடைய மகன்களுக்கும், மகளுக்கும் முடிந்த வரையில் பண உதவி செய்து வந்தேன் என்று வழக்குக்காக பொய்யாகச் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகன் ஜான் வினோத்குமார் ஆனைமலையில் வேலை செய்து பத்தாயிரம் சம்பாதித்து வருவதாக வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதை காட்டுவதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய பிரமாண பத்திரத்தில் உயிருக்காக போராடி வருகிறேன் என்று சொல்லி உள்ளேன் எந்த மருத்துவமனையில் எப்போது சிகிச்சை பெற்றேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6. நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அது தொலைந்து விட்டது. நான் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரூ. 8500 நான் ஓய்வூதியம் வாங்குகிறேன் என்றால் இல்லை ரூ. 20000 பென்ஷன் வாங்குகிறேன். மிலிட்டரி பென்ஷன் மட்டும் பெற்று வருகிறேன். மிலிட்டரி லிருந்து எப்போது ஓய்வு பெற்றேன் என்றால் 1990 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். ஓய்வு பெற்ற பிறகு பிஎஸ்என்எல் வேலை செய்தேனா என்றால் இல்லை வீட்டில் ஓய்வில் இருந்தேன். மிலிட்டரியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு பிஎஸ்என்எல் நான் வேலை பார்த்தேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு ரயில்வேயில் உள்ள பாதுகாப்பு பணியில் இருந்தேன் என்றால் சரியல்ல.

7. நான் 3 பென்சன்களை பெற்று வருவதாலும் மனுதாரர் சட்டப்படியான என் மகள் என்பதாலும் அவருக்கு நான் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இரண்டாவது திருமணம் செய்ததிலிருந்து நாளது தேதி வரை மனுதாரருக்கும் இரண்டு மகன்களுக்கும் பண உதவி செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் திருமணம் ஆகவில்லை என்பதை மறுக்க முடியுமா என்றால் என் மகளுக்கு திருமணம் ஆகி விட்டதாக சொன்னார்கள். என் மகளுக்கு

**ஜீவனாம்சம் கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காக திருமணம் ஆகி விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு திருமணம் நடைபெற்று இருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. ஜீவனாம்சம் கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை